[2010 ஏப்ரல் 15

46—

சிலைகள்

***60673—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடெங்கும் பராமரிப்பின்றிக் கிடக்கும் புராதனமான புத்தர் சிலைகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தில் பராமரிப்பின்றி இருந்த, அறிந்த மற்றும் அறியப்பட்ட புத்தர் சிலைகள் அருகிலுள்ள அரசு அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் துறை அகழ்வைப்பகங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், அவையில் இல்லை. எனவே, அவருக்குப் பதிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.*

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, தமிழகத்தில் உள்ள புராதனக் கோயில்களில் மரகதலிங்க சிலைகள் களவு போனவை எத்தனை? கண்டுபிடிக்கப்பட்டவை எத்தனை? இவற்றில் போலியான மரகதலிங்க சிலைகள் எத்தனை? உண்மையான சிலைகள் எத்தனை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைசாமி, திரு. ரவிக்குமாருக்கு மாற்றாகத்தான் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): *அதேபோன்று அஸ்திவாரம் தோண்டும்பொழுது ஐம்பொன் சிலைகள் நிறைய கிடைத்ததாகப் பத்திரிகைகள்மூலமாக*

2010 ஏப்ரல் 15]

நாம் அறிகிறோம். இந்தச் சிலைகளையெல்லாம் ஒரே இடத்தில் வைத்துப் பராமரிக்கின்ற திட்டம் துறையில் இருக்கிறதா? காரணம், ஒரே இடத்தில் வைக்க வேண்டிய அவசியம் உள்ளது. கடற்கரையிலேயே சிலைகள் காணாமல் போனதால், இந்தத் துறை எச்சரிக்கையாக இருந்து, ஒரே இடத்தில் காட்சிப்பொருளாக வைப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரகத லிங்கங்களைப் பொறுத்தமட்டிலே அது அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே வரக்கூடிய ஒரு விஷயம். எனவே, தமிழகத்திலே மரகத லிங்கங்கள் குறித்த வினாவினை ஒரு தனிக் கேள்வியாக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே எழுப்புவது பொருத்தமாக இருக்கும். ஆனால், அவருடைய கேள்வியின் இரண்டாவது பகுதியிலே கேட்டதைப்போல, கோயில் திருப்பணிகளைச் செய்கிறபோது அல்லது குளம் வெட்டுகிறபோது பல்வேறு இடங்களிலே, பூமிக்குக் கீழே, கிடைக்கக்கூடிய ஐம்பொன் சிலைகள் ஆங்காங்கே இருக்கக்கூடிய வருவாய்த் துறையினர் மூலமாக, மாவட்ட ஆட்சியரால் பெறப்பட்டு மாவட்டங்களிலே இருக்கக்கூடிய அருங்காட்சியகங்களிலே வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, எல்லா சிலைகளையும் ஒரே இடத்தில் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். திருவாரூர் கோயிலிலே அதற்காக தனியாக ஒரு அறை இருக்கிறது. எல்லாக் கோயில்களிலும் இருந்த மிக முக்கியமான சிலைகள், ஐம்பொன் சிலைகள் திருவாரூர் கோயிலிலே இப்போது பராமரிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து இத்தகைய சிலைகளை முறையான வகையிலே ஓரிடத்திலே வைத்துப் பராமரிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். கடற்கரையிலே காணாமல் போன சிலைகளையும் கண்டெடுத்து நிறுவிய புகழ் கலைஞர் ஆட்சிக்கு இருக்கக்கூடிய காரணத்தால் இந்தச் சிலைகளையும் அரசு நிச்சயம் பாதுகாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற புத்தர் சிலைகள் என்பவை புத்த மதத்தின்

[2010 ஏப்ரல் 15

அடையாளங்களாக மட்டுமில்லாமல் தமிழனுடைய பண்பாட்டுச் சின்னங்களாக, தமிழர்கள் ஜாதி வேறுபாடில்லாமல் வாழ்ந்தார்கள் என்பதன் அடையாளங்களாக விளங்குகின்றன. சேலம், அரியலூர், பெரம்பலூர், நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும் பல சிலைகள் சாலையோரங்களில் பராமரிக்கப்படாமல் உள்ளன. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலே இருந்தாலும்கூட அவையெல்லாம் போதிய பராமரிப்பின்றிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாத்துப் பராமரிப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புத்த மதமும், சமண மதமும் செல்வாக்கு பெற்றிருந்த வட மாவட்டங்களிலே புத்தர் சிலைகள், அதேபோல தீர்த்தங்கரருடைய உருவங்கள், பல்வேறு இடங்களிலே விரவிக் கிடப்பதை நாம் அறிகிறோம். இதுமாத்திரமல்லாமல், குறிப்பாக தருமபுரி மாவட்டத்திலே, பல்வேறு இடங்களிலே நடுகற்கள் இருக்கின்றன. எனவே, இந்தச் சிலைகளெல்லாம் எங்கெங்கே இருக்கின்றன என்று பார்த்து சில இடங்களிலே கேட்பாரற்று இருந்த அந்தச் சிலைகளை அங்கங்கே இருக்கக்கூடிய அகழ்வைப்பகங்களுக்கு, அருங்காட்சியகங்களுக்கு எடுத்துச் சென்றிருக்கிறோம்.

மதுரையை ஒட்டிய பகுதியிலே இருந்த சிலைகள், மதுரையிலே திருமலை நாயக்கர் மகாலிலே அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அருங்காட்சியகத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றன. அதைப்போல, தருமபுரி மாவட்டத்தில் கிடைத்தச் சிலைகள், கடகத்தூரிலே கிடைத்தச் சிலைகளெல்லாம்கூட அங்கே இருக்கக்கூடிய அகழ்வைப்பகங்களிலே வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, எந்தப் பகுதியிலே சிலைகள் கிடைத்திருக்கின்றனவோ, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அருங்காட்சியகத்திலே வைத்து அரசு பராமரித்து வருகிறது. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால் பல இடங்களிலே அந்தச் சிலைகள் அந்தந்தக் கிராம மக்களாலே பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

காலத்தின் போக்கில், இத்தகைய தீர்த்தங்கரர் சிலைகள், மகாவீரர் சிலைகள், புத்தர் சிலைகள் எல்லாம் அம்மணசாமி

2010 ஏப்ரல் 15]

சிலைகள் என்கின்ற வகையிலே அந்தந்தக் கிராமத்தினுடைய தேவதைகளாகக்கூட மாறி அந்த மக்களே பாதுகாத்து வரக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சிலைகளை பொதுமக்களுடைய பாதுகாப்பிலே விட்டுவிட்டு மற்ற சிலைகளை அந்த ஊர் மக்களுடைய அனுமதியோடு எடுத்து அகழ்வைப்பகங்களிலே, அருங்காட்சியகங்களிலே பாதுகாக்கக்கூடிய முயற்சியைத் தொடர்ந்து இந்த அரசு செய்து வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

மின் வேலி

***113636—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை, போளுவாம்பட்டி சரகம், சிறுவாணி முதல் ஆனைகட்டி பெரியநாயக்கன்பாளையம் வரையுள்ள மலையடிவாரப் பகுதிகளில் மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை, போளுவாம்பட்டி சரகம், சிறுவாணி முதல் ஆனைகட்டி பெரியநாயக்கன்பாளையம் வரை 3.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு வன எல்லைப் பகுதியில் சூரிய ஒளியில் இயங்கும் மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.*

திரு. எம்.என். கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகளின் தொந்தரவுகளிலிருந்து அங்கு இருக்கின்ற*